உ
சிவமயம்

[Re]gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௮] யாழ்ப்பாணம்—விய ஹூ மார்கழி மீ ௧௯ உ (1947 ஜனவரி 3 வெள்ளிக்கிழமை) [இல ௭௱

# பரமபுருஷன் ஸ்ரீ ரமணமூர்த்தி


## பாரதநாட்டின் பரமார்த்திக மேதை

## திருவருணை மிளிரும் தெய்வச் சோதி

### சாந்தமூர்த்தியின் ஜெயந்தி 7—1—47 மங்கலவாரம்

திருவருணை ரமணபக்தை "உமா" இந்துசாதனத்துக்கென விசேஷமாக எழுதி உதவியது

[ அருமறையின் முடியில் ஒளிர் அழகமிகு முத்து, திருவருணைத் தலத்தமைந்த தெய்வீக முத்து, சத்குரு பகவான் ஸ்ரீரமண மஹரிஷிகளின் 67-வது ஜயந்தி மகோற்சவம் வருகிற 7—1—47 செவ்வாய்க்கிழமை உலகிற் கொண்டாடப்படவிருக்கிறது. அதனையிட்டு திருவருணை ரமணபக்தை 'உமா" இப்பத்திரிகைக்கென விசேஷமாக எழுதி உதவியுள்ள இக்கட்டுரை அன்பர்களுக்குப் பெருவிருந்தாகும். இக்கட்டுரையைப் பகவான் திருவடிகட்குச் சமர்ப்பிக்கின்றேம். ]



பகவான் ஸ்ரீரமண மகர்ஷிகள் இராமநாதபுரம் ஜில்லா திருச்சுழியலில் (30-12-1879) புனர்வசுவில் திருவவதாரம் செய்து மதுரையில் சிலகாலம் கல்வி பயின்று தமது பதினேழாவது வயதில் அருணாசலேசுவரரது அருளழைப்பினால் தூண்டப்பட்டு 1-9-1896-ல் திருவருணை வந்து சேர்ந்து, இற்றைக்கு 50 ஆண்டுகளாக தமது ஆன்மசக்தியை உலகெங்கும் பரப்பி, அலைகடல் துரும்பென சம்சாரச் சுழலில் அகப்பட்டுத்தவிப்போரைக் கரையேற்றி வருகிறார்.

7-1-1947 மங்களவாரம் புனர்வசுவில் ஸ்ரீ பகவானது 67-வது ஜயந்தி மஹோத்ஸவம் உலகின் பல பாகங்களிலுமுள்ள ஸ்ரீ பகவானது பக்தகோடிகளால் திருவருணையிலும் மற்ற இடங்களிலும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

ஸ்ரீ பகவானது தன்மயானந்த சாந்திப் பிரவாகம் எங்கெங்கும் வியாபித்து, எவ்வளவு தூரத்திலிருப்பவர்களையும் தம்மிடம் ஈர்த்துத் தம் மின்பக்கடலி லாட்டுவித்து, சாந்தியளிக்கிறது. ஆழ்ந்துயர்ந்த கருத்துக்களடங்கிய அவர் அருள்வாக்கிலிருந்து வரும் ஒவ்வொரு சுருக்கமான மணிமொழியும் கேட்பவர்கள் மனத்தில் ஊடுருவிப் பாய்ந்து அங்கேயே நிலைத்துவிடும் சக்தி வாய்ந்ததாகும். ஒருமுறை தம்மைவந்து தரிசித்தவர்கள் மனத்தைக் காந்தமெனக் கவர்ந்து, மறுபடியும் மறுபடியும் தரிசிக்கவேண்டுமென்னும் அவாவைத் தூண்டி, ஒவ்வொருமுறையும் அவர்கள் மனம் தூய்மை யடைந்து மேன்மேலும் இன்பவாழ்க்கையில் திளைக்கச் செய்யும் பகவானது கருணாவிலாச அருள்நோக்கின் அபார சக்தி யாவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடியதாகும்.

பகவானது அசைவற்ற மலையொத்த தீரம், அண்டியவர்களை எதற்கு மஞ்சாத சஞ்சலமற்ற திடமன துடையவர்களாக்கி அவர்கள் வாழ்க்கைப் பாதையை இன்பமயமாக்குகிறது. யாரும் ஏதும் கேட்கவேண்டாம். அவரும் ஒன்றும்சொல்லவேண்டாம். பகவான் சந்நிதியில் அமைதியாக உட்கார்ந்திருந்தாற்போதும். ஒவ்வொருமுறையும் தங்கள் மனம் தூய்மையும் திடமும் பெற்றுச் சலனமற்று நிற்க வல்லமை பெறுவதைச் சிறுமுயற்சி யுடையவர்களும் எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடும்.

முன்னோர் எழுதிவைத்த வேதாந்த நூல்களில் எவ்வளவோ விரிவாகச் சொல்லப்பட்ட விஷயங்களையெல்லாம் சிற்சில சிறுமொழிகளில் எளியமனத்திற்கும் விளங்கும்படி சொல்லும் நேர்த்தி எவ்வளவோ அறிந்த மிகப்பெரு மேதாவிகளையும் திகைத்து வணங்கவைக்கும் ஆற்றலுடையது.

உன்னைப் பார்க்க நூல்கள் தேவையில்லை. உன்னுள் நீ யாரெனப் பார்க்க, நூல்களில் தன்னைத் தேடுவதால் யாது பயன்? அன்னியத்தை அறிந்தது பந்தம்: மறந்தது மோக்ஷம். அறியும் அறிவாக இல்லாது, அறிக்கும் அறிவாக-சும்மா இருந்து விளங்கும் சுத்த அறிவாக இரு சஞ்சல சுபாவமுள்ள மனத்தை அலையவிடாமல் மற்ற ஜடப் பொருள்களை இவை என் பொருள்கள் என்பதைப் போலவே, இது என் உடம்பு, இது என் மனம் என்று தன்னுடைமைகளாகச் சொல்லிக் கொள்ளும் அவற்றுக்கு இலக்ஷணமான இந்த நான் யார் என்று ஊக்கமுடன் தன்னுள்ளே தன்னைத்தேடி யறியும் வேலையில் திடமுற நிற்கச் செய்வதே ஒருவன் செய்யவேண்டிய முக்கிய சாதனம் என்று இரண்டொரு நூல்களாலோ பெரியோர்கள் சொன்ன இரண்டொரு வசனங்களாலோ அறிந்தபின் மேலும் மேலும் பல நூல்களை அறியவிரும்புவதேன்? ஆசையறவே ஞானம். அது எப்படிமுடியும்? மனம் நிலைத்து நின்றால், ஆசை பொறாமை கோபம் தாபம் யாவும் தாமே நீங்கிவிடும், வீண் காரியத்திற் பிரவேசியாதே, மற்றவைகளைக் கவனியாதே. உன்னைப்பார். உன் சலனமற்ற மனதைப் பார்ப்பதுதான் பெரியதவம். நல்லது கெட்டது, பெரிது சிறிது என்ற இரட்டை நினைவுகளுக்கு அப்பால் நில். இந்த நினைவுகளே உன்னை மறைக்கும் தடைகள். பேதங்களைப் பார்க்கும் புத்திதான் உன் மனத்தை அலையவிடுவது - என்பனபோன்ற பொன்மொழிகளே, ஸ்ரீ பகவான் தம்மை நம்பிய அன்பர்களுக்குச் சொல்வன.

அவற்றோடு பின்னும், 'நான் பாபி' என்று வருந்தாதே. முன்னிருந்ததை எண்ணுவதைவிட்டு இனி எப்படி இருக்கவேண்டும் என்பதைநிச்சயித்து தீவிரமாக முயற்சிசெய். மனிதன், நான் என்னும் அகந்தையோடிருந்து கொண்டே ஈச்வரனை அடைய முயல்கிறான். அது எப்படி முடியும்? நானென்னும் அகந்தை அழிந்த விடத்தில்தான் ஈச்வர சுவரூபமான உண்மையயத் தானாகஆகிறான் இப்படியான தன்னில் பந்தமுமில்லை, மோக்ஷமுமில்லை.

இந்நிலையை அடைய நாட்டைவிட்டுக் காட்டுக்குப் போகவேண்டாம், மூச்சைப் பிடித்துக்கொண்டு தலைகீழாக நிற்கவேண்டாம். எந்தவிடத்திலும் எந்தச் சமயத்திலும் நீ இருக்கிறாய். அந்த உன்னை ஆராய்ந்தறிய

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# சுதந்திரம்

ஹிந்துக்களாகிய நாங்கள் எம் சுதந்திரத்தை எவ்வளவோதரம் இழந்திருக்கிறோம். எவ்வளவோ தரம் அதனை மீட்டும் பெற்றிருக்கிறோம். ஆனால் நாம் எந்தவிதமாக அரசியல் விஷயத்தில் வீழ்ச்சியடைந்த காலத்தும், எங்கள் முன்னோரின் ஒழுக்க வழக்கங்களைக் கைவிட்டதில்லை. எங்கள் புநித மதத்தைக் கைவிட்டதில்லை: எங்கள் சமயாநுட்டானங்களைக் கைவிட்டதில்லை. எங்கள் ஆலயங்களைக் கைவிட்டதில்லை. இன்னும் இந்த நாடு சுதந்திர மடையும் விஷயத்தில், ஹிந்துக்களாகிய எங்களைப்போல அதில் சிரத்தையுடைய வேறெவரும்இல்லையெனத் துணிந்து கூறுவோம். ஆனால், சுதந்திரம் என்னும் மாளிகை எங்களுடைய புநித மானமதத்தைமுறித்து, எங்கள்கலாசாரங்களை அழித்து, எங்கள் சுயமரியாதைக்கு நாசம்விளைத்து, ஹிந்துக்களாகிய எங்கள் மானம், சுயமரியாதை என்பவற்றுக்குத் தீங்கு தேடி, எங்கள் பெண் மணிகளின் கற்புக்குப் பங்கந்தந்து, ஸ்தாபிக்கப் படுமானால், எங்களுக்கு அத்தகைய சுதந்திரம் வேண்டவே வேண்டாம்: அதனை உதைத்துப் பல மைல் தூரத்துக் கப்பால் தள்ளுவோம். இது சத்தியம்.

ஸ்ரீ ஜாத் எல். பி. போபத்கார்
அகில இந்திய ஹிந்துமகாசபைத் தலைவர்

# - புதிய முறை -

## தலைமைக்காரர் நியமனம்

அநுராதபுரம் நகரத்துக்கு ஓர் தலைமைக்காரனை நியமிக்கும் விஷயத்தில் வட மத்திய மாகாணத் தலைவர் மிஸ்ரர் எஸ். எப். சமரசிங்ஹ ஓர் நவீன முறையைக் கையாண்டிருக்கிறார். குறித்த தலைமைக்காரனை நியமிக்கும் தினத்தன்று, நகரசங்க அங்கத்தவர்களையும், நகர வரியிறுப்பவர்களையும் கூட்டி ஓர்கூட்டம் வைத்தார்.

தலைமைக்காரர் பதவிக்கு 10 பேர் மனுச் செய்தனர். அவர்களில் மாகாணத் தலைவர், மிஸ்ர சுல்தான் மொகிதீன் என்பவரையே தெரிவுசெய்து அவரைத் தலைமைக்காரனாக நியமிப்பதில் யாருக்கேனும் ஆட்சேபனையுண்டோ என்று சமுகமளித்தவர்களைக் கேட்டார்.

நகரசபை உபதலைவர், மாகாணத் தலைவர் செய்த நியமனம் தங்களுக்குத் திருப்திதான் என்றும் தெரிவித்தார். இன்னோர் நகரசபை யங்கத்தவரும் அப்படியே தெரிவித்து, இந்த மாதிரி ஊரவர்களையும், தலைமைக்காரர் நியமன விஷயத்தில் கலந்தாலோசிக்க மாகாணத் தலைவர் நிச்சயித்தமையைப் பாராட்டிப் பேசினர். இப்படியான செயல்களினால் ஊரவர்க் கும் அரசாங்கத்தாருக்கு மிடையே யுள்ள தொடர்பு பலப்படும் என்றும் கூறினர்.

## மீறுவாரா ?

### ஸ்மட்ஸின் எதிர்கால வேலை

ஐக்கியதேச ஸ்தாபனம் தீர்ப்புக் கூறியதற் கிணங்க, சேனாதிபதி ஸ்மட்ஸ், தென்னாபிரிக்க இந்தியர் விஷயத்தில் ஓர் சமரசத்துக்கு வருவாரா? இப்போதுள்ளநிலையை ஆராயுமிடத்து அது சந்தேகம் என்றே தெரிகிறது.

தென் ஆபிரிக்கப் பாராளுமன்றத்து எதிர்க்கட்சித் தலைவரான டக்ரர் டீ. எப். மாலன் என்பவர் இது விஷயத்தில் ஸ்மட்ஸ் சேனாதிபதிக்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இவ் விஷயத்தில் ஸ்மட்ஸ், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத் தீர்ப்புக்குப் பணிந்து நடப்பாரேயானால், அசனால் வெள்ளையர் ஆதிக்கத்துக்குச் சாவு மணியடித்தவராவர் என்றும், தென்னாபிரிக்கா விஷயத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பிரவேசிக்க உரிமையில்லை என்றும், ஓர் அறிக்கையை டக்ரர் மாலன் விடுத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற திங்கட்கிழமை (6-1-47) ஆருத்திராதரிசனத்தின்பொருட்டு இந்துசாதனாலயம், சைவப்பிரகாச யந்திரசாலை யென்னுமிவைகளிற் கருமம் பார்ப்போர்க்கு விடுதலை யுதவப்படுதலால், அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா வென்பதை அபிமானிகட்குத் தெரிவிக்கின்றோம்.

மனேஜர்.

---

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியவருஷ
மார்கழி கக௳ உ வெள்ளிக்கிழமை

## இங்குள்ள தெருக்களின் சீர்கெட்டநிலை

இந்த யாழ்ப்பாணப் பகுதியிலேயுள்ள பிரசித்த தெருவீதிகளும் குறுக்குத் தெருக்களும் முன் எக்காலத்துமில்லாத சீர்கெட்டநிலையிற் கிடக்கக் காணப்படுகின்றன; உலக இரண்டாம் யுத்தம் தொடங்கி நடந்த காலத்திலே, இங்குள்ள தெருவீதிகளுட் பிரசித்தமான தெருக்கள் சிலவொழிய, ஏனைய தெருக்களெல்லாம்காலந்தோறும்செப்பனிடாமற் கிடக்கின்றன; முன்எக்காலத்தாயினும் இந்த இலங்கையின் பாகங்களிற் சஞ்சரித்தல் செய்யாதராணுவ'திறக்ஸ்'எனப்படும் பாரிய மோட்டார் வண்டிகள் யுத்த காலத்திலே, பெருந்தெரு, குறுக்குத்தெரு, பரந்தவீதி, ஒடுங்கியவீதி என்ற பேதமின்றி ஒன்றன்பின்னென்றாக அல்லும் பகலும் இடையீடின்றிச் சஞ்சரித்தமையை இங்குள்ள மக்களெல்லோரும் அறிவர்; மேலே சொல்லப்பட்ட இராணுவ "திறக்ஸ்" என்னும் வண்டிகளும், லொறிகளும், பெரிய பஸ்களும் இங்குள்ள தெருக்கள்தோறும் கண்டபடி சஞ்சரித்தமையினால், இத்தெருக்கள் அடைந்த சிதைவு சற்றல்ல; சில தெருவீதிகள் கல்லெல்லாம் சிதைந்து துகளாகிப் போய்விட, ஒழுங்கையின் கதியையடைந்து கிடக்க இன்றுங் காணப்படுகின்றன; சில குறுக்குத் தெருக்கள் வெள்ளவாய்க்கால்கள்போற் கிடக்கக் காணப்படலாயின; ஆனாலும் யுத்தம் முடிந்தபின்னாயினும் இத்தெருக்கள் ஒருவாறு செப்பனிடப்படுமென ஊரவர்களும் பலவகையான வண்டிகளைச் செலுத்துபவர்களும் வழிப் போக்கர்களும் எதிர்பார்த்திருந்தார்கள். யுத்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்டும், அதிகாரிகள் இத்தெருக்களைச் செப்பமிடுவித்தற்கு முயற்சி செய்திலர். மிகவும் தூரத்திற்குச் செல்லும் பிரதான தெருக்கள் சில, பாதிசெப்பனிடப்பட்ட நிலையிற் காணப்படுதல் நிசமெனினும், இங்குள்ள தெருக்களுட் பல மிகவுஞ் சீர்கெட்ட நிலையிலே இன்னமும் காணப்படுகின்றன.

இப்படியான சீர்கெட்ட நிலையிற் கிடக்குந் தெருக்கண் மார்க்கமாக, மக்கள் மாட்டுவண்டியிலாக, குதிரை வண்டியிலாக, "றிக்ஷோ" முதலிய இழுவை வண்டிகளிலாக, துவிசக்கரத்திலாக, மோட்டாரதம் பஸ் லொறி முதலியவற்றிலாக போக்குவரவு செய்வதென்றால், பிராண சங்கடமாகவே யிருக்கிறதென்று ஊரார் எந்தநேரமும் முறையிடுகிறார்கள்; சில தெருக்கள் மேலே சொல்லப்பட்ட வண்டிகளின் உபயோகத்திற்கு உதவாவெனக் கைவிடப்படலாயின; இதற்கு உதாரணமாக, யாழ்ப்பாணம் பருத்தித்துறை நெடுந் தெருவுக்கிடையில் வல்லைவெளிச் சந்தியில் அச்சுவேலிப் பக்கத்திற்குப் பிரிந்துபோய் மீண்டும் யாழ்ப்பாணம் - பருத்தித்துறைத் தெருவிலே, ஆவரங்காலுக்குச் சமீபமாகச் சந்திக்கும் வளைந்த குறுக்குத் தெருவையே எடுத்துக் காட்டலாகும். யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமிடையே ஓடும் "பஸ்கள்" மேற்படி பெருந்தெருவால் நேரே போதலின்றி, அச்சுவேலிப்பகுதியிலுள்ள பிரயாணிகளின் வசதியையும் உத்தேசித்துப் போலும், மேலே சொல்லப்பட்ட வளைந்த தெருவால், நீடித்த காலம் போதல் வருதல் செய்யலாயின; ஆனால் இப்பொழுது சில வாரங்களாக, அச்சுவேலித் தெரு மார்க்கமாக பஸ் முதலிய வண்டிகள் ஓடுதல் தவிர்க்கப்படலாயிற்று; காரணம் அத்தெரு அடைந்து கிடக்கும் சீர்கெட்ட நிலைமையேயாம்; அந்தத் தெரு சிதையக்கூடிய வரையிற் சிதைந்து, தேயக்கூடியவரையில் தேய்ந்து, தெரு கிடந்த மார்க்கம் பள்ளமாகவும், பக்கலிலுள்ள கான் கிடந்த இடம் திடராகவும் காணப்படுகின்றனவெனச் சொன்னாலும் மிகையாகாது; இத் தெருவாற் சென்றமையினாலே கஷ்டப்பட்ட பிரயாணிகள் பலரென்றும், சிதைவுற்ற நெல்ஸன்பஸ், சாதாரண பஸ், மோட்டர்ரதம், ஏனைய வண்டிகள் பலவென்றும் அத்தெரு வாயிலாகப் பல்லாற்றானும் ஊடாடியவர்கள் நிசத்தோடு சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்பொழுதுதானும்தெருவதிகாரிகள் இத் தெருவைச் சீர்ப்படுத்தும்முயற்சியைச் செய்யத் தொடங்கி யிருக்கிறார்களெனச் சொல்லப்படுகின்றது.

நிற்க, இந்த யாழ்ப்பாணப் பட்டினமே வடமாகாணத்தின் தலைப் பட்டினமாகும்; இதனைப் பரிபாலித்தற்கு ஒரு பட்டின சங்கமுமுண்டு; இப்பட்டினசங்கத்தின் பரிபாலனத்திலுள்ள குறுக்குத் தெருக்களும் பகிரங்க வேலைப் பகுதியாரின் பரிபாலனத்திலுள்ளனவாகிய பெருந்தெருக்களும்எல்லாம் மிகவும் ஈனமான நிலையிற் கிடக்கின்றன; இத் தெருக்கள் சிதைந்த [illegible] கிடக்கின்றன [illegible] கொள்ள வொண்ணாது; இந்த மாரிகாலத்திலே சகதியோடும் பலவகையான அழுக்குக்களோடும், மலத்தோடும், துர் நாற்றத்தோடுங் கூடியனவாகவே இத்தெருக்களும், பக்கலிலுள்ளவாகிய கான்களுங் கிடக்கின்றன; இலங்கையிலே வேறு எந்தப் பட்டினத்தின் தெரு வீதிகளாயினும் இந்தச் சீர்கெட்ட நிலையில் இல்லையென்று தேச சஞ்சாரஞ் செய்தோர் சொல்லுகிறார்கள்; இத்தெருக்கள் விஷயமாக இப்பத்திரிகை மூலம் முன்னர்ப் பலமுறை நாம் முறையிட்ட போதும், அதிகாரிகள் யாதும் முயற்சி செய்யாமலும் பட்டினவாசிகட்குச் சமாதானம் சொல்லாமலும் வாளா விருக்கின்றனர்; பட்டினத் தெருக்கள் நன்மார்க்கமாக விருப்பதேயன்றித் துன்மார்க்கமாக விருக்க வொண்ணாதல்லவா? யுத்தந் தொடங்கிய பின்னர் இற்றை வரையிலே திருத்தப்படாத் தெருக்களை இங்கு எவரும் நேரில் வந்து பார்க்கலாம். தெருவிற்குரிய அதிகாரிகள் இனியேனும் இவற்றைச் சீர்ப்படுத்த [illegible] முயற்சிகளைச் செய்வார்களா?

---

ஓம்

### அவன் சீர்பாட வாரீர்

பண்டோருநாட் பார்த்தனுக்குப் பாசுபதம்
பரிந்தளித்த பரமன் றானே
அண்டர்சிறை மீட்பதற்கா யறுமுகனா
யவதரித்த தன்மைபோல
மண்டலத்தோ ருய்வதற்காய் மனிதவுடல்
தனில் ரமண நாமந் தாங்கித்
தொண்டர்துயர் தீர்ப்பதுவே தொழிலானான்
தொழுதவன் சீர்பாட வாரீர்.  —ந. இ.

---

# வகுப்புவாதிகள் யார்?

## செனனாயக்காக்கோஷ்டி என்கிறார் ஜீ. ஜீ.

சென்ற சனிக்கிழமை கைதடியில் நிகழ்ந்த அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டுக் கூட்டத்தில், கணக்குப் பரிசோதனை யதிகாரியாயிருந்து இப்போது இளைப்பாறியுள்ள ஸ்ரீ க. கனகரத்தினம் பின்வருமாறு பேசினார்.

"இனி வரவிருக்கும் அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்றுதற்காகவே மிஸ்ரர் செனனாயக்கா, தாமாக ஐக்கிய தேசீயக்கட்சி என்ற ஓர் ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார். இன்று இந்த இலங்கையில் வகுப்புவாதம் என்னும் நஞ்சைச் கக்குவது இந்த செனனாயக்காக் கோஷ்டியன்றி தமிழ்க்காங்கிரஸ் அல்ல, இந்தக் கோஷ்டிதான் இலங்கையிலே ஓர் சிங்கள ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கிறது. லண்டனிலே இலங்கைப் பிரதிநிதியின் மாளிகையின்மீது சிங்களர்க்கு மாத்திரம் உரிய சிம்ஹக்கொடியைப் பறக்கவிட்டிருப்பது இக்கோஷ்டியாரின் எதிர்கால வேலைக்குப் போகிய அத்தாட்சியாகும். இன்று மிஸ்ரர் செனனாயக்கா தேசீயவாதம் பேசுகிறார். சாரசப்பல்லவி பாடுகிறார். ஆனால் இவருடைய தேசீயமும் சமரசப் பேச்சும் ஓர் செல்லாக்காசுக்குப் பெறுமதியில்லாதன."

இதன்பின் பேசிய வழக்கறிஞர் ஸ்ரீ வி. எஸ். கார்த்திகேசு, தமிழ்ப் பொதுஜனங்களைக் கலந்து கொள்ளாமல் ஐக்கிய தேசீயக்கட்சியிற் சேர்ந்துள்ள தமிழ்த் தலைவர்கள என்றிருப்போரின் செயல்களைக் கண்டித்துப் பேசினார்.

இதன்பின் ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலம் பேசினார். இன்று இந்த இலங்கையிலே முதலாளிமார்க்கும் செல்வர்க்குமாக ஓர் கட்சி உண்டென்றால் அது ஐக்கிய தேசீயக்கட்சியே யென்றும், இக்கட்சிக்கும் ஏழைகளுக்குமிடையேயுள்ள தூரம்அதிகம்என்றும் அவர்கூறினர் இன்னும்,"தமிழர்மகாநாடு ஓர் வகுப்புவாத ஸ்தாபனம்என்றும் நான் ஓர் தடித்த வகுப்புவாதி என்றும் ஓர் சிலர் மறைமுகமாகப் பிரசாரம் புரிந்து வருகிறார்கள். இதனைப்போன்ற பொய் பிறிதொன்றுமில்லை, சிங்களர் எங்கள் சகோதரர். இந்த இரு சாதியினரும் இந்த இலங்கையில் வசிக்கவே போகிறோம். செனனாயக்காவைப்போன்ற எத்தனைபேர் துர்ப்பிரசாரம் செய்தாலும், எங்களுக்கிடையேயுள்ள சகோதரத்துவத்தைக் கெடுக்க முடியாது. நாம் செனனாயக்காக் கோஷ்டிக்கு எதிரிகள் என்பது உண்மை. நாம் மாத்திரமல்ல, சிங்களச் சமூகத்தினரில் எத்தனையோபேர், மிஸ்ரர் செனனாயக்காவின் சுயரூபத்தை இப்போது கண்டுகொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள்." என்று ஸ்ரீ பொன்னம்பலம் கூறினர்.

இதன்பின் வேறும்சிலரும் பேசியபின், கைதடிப்பகுதிக்கென தமிழர் மகாநாட்டின் கிளைஸ்தாபனம் ஒன்று நிறுவப்பட்டது.

---

## போர் தொடங்குமா?

பிரிட்டிஷ் அதிகாரவர்க்கம் தனது வழவழாக் கொள்கைகளினால், இந்திய மக்களிடையே பெரும் மனக் கொதிப்பை ஏற்படுத்திவிட்டார்கள். அவர்கள் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது, தாம் இன்னும் இந்தியாவில் வேரூன்றி நிற்பதற்காக; அவர்களைக் கலைக்கவேண்டும். அதற்குக் கூடிய சீக்கிரம் ஓர் பெல்லாத போராட்டம் மீண்டும் நாம் செய்யவேண்டும் என்று இந்திய அபேதவாதிகள் தலைவரான ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் இற்றைக்கு சின்னாட்களுக்குமுன் கூறினர். ஆனால் அப்படியான போராட்டம் நடைபெறாமலே பிரிட்டிஷாரை விரட்டிவிடலாம்; அதற்கு முஸல்மான்கள் ஒத்துழைக்கவேண்டும். இப்போதும் சரி முஸ்லிம்லீக்கர் தங்கள் நிலையை உணர்ந்து காங்கிரசுடன் ஒத்துழைத்தால், நாட்டுக்குக் கதிமோட்சம் ஏற்படும் என்று வல்லபாய் படேல் சென்றவாரம் ஓர் கூட்டத்திற் கூறினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதி இல்லையா?

## அமெரிக்காமீது இங்கிலாந்து அணுக்குண்டு வீசுமா?

உலகமகாயுத்தத்தின்போது அமெரிக்காவின் பிரதம சேனதிபதியாயிருந்த பெயிற்றன் மார்ச் என்பவர், இங்கிலாந்தைப்பற்றிஅமெரிக்காவுக்கு ஓர் கடுமையான எச்சரிக்கை விட்டிருக்கிறர்.

"அணுக்குண்டு விஷயத்தைஅமெரிக்கா பரம ரகசியமாக வைத்திருக்க வேண்டும். ருஷியா அணுக்குண்டைப்பற்றி அறிந்து, அதனை உற்பத்தியாக்கி, ஈற்றில் அமெரிக்காவின் மீதே பிரயோகிக்கலாம் என்று பலர் கூறுகிறர்கள். ருஷியாதான் இப்படிச் செய்யுமா? இங்கிலாந்து அப்படிச் செய்யமாட்டாதா? இங்கிலாந்து இன்று அமெரிக்காவுடன் நேசபான்மையுடன் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனல் இதே இங்கிலாந்து நாளைக்கு அந்த அணுக்குண்டை எம்பக்கம் திருப்பித் தாக்கினல் நாம் என்ன செய்யமுடியும்" என்று சேனதிபதி பெயிற்றன் மார்ச் கேட்கிறர், அவர் மேலும் கூறுவதாவது:

"பிரிட்டிஷார் இப்படியான கொடிய வேலைகளையும் பொல்லாத அக்கிரமங்களையும் செய்யமாட்டார்கள் எனச் சிலர் கூறலாம். ஆனல் இந்தியாவிலே 1919-ம் ஆண்டில் அவர்கள் நிகழ்த்திய பாஞ்சாலப் படுகொலையைப்பற்றி நான் நன்கு அறிவேன். சமயம் வாய்த்தால், பிரிட்டிஷார் நீதி நியாயம் என்பவற்றை ஓர் பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு எம்மைத் தாக்கப் பின்வாங்கமாட்டார்கள்.

"இனியும் உலகிலே யுத்தம் நிகழாதிருக்கவேண்டுமானல், அமெரிக்கா தன்னை மிகவும் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். அமெரிக்காவில் உள்ள சகல வாலிபர்க்கும் கன்னியர்க்கும் ராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும்.

"ஐக்கியதேச ஸ்தாபனம் மூலமாக உலகில் சமாதானம் நிலவுமா என்பது சந்தேகமான விஷயம்தான். சமாதானம் அமைதி என்பவற்றை உடன்படிக்கைகளாலும் ஒப்பந்தங்களாலும் ஒருபோதும் நிலைநிறுத்தமுடியாது. இப்போது நடந்துமுடிந்த யுத்தத்துக்குமுன் இருந்த சர்வதேச சங்கம் எதனைச் சாதித்துவிட்டது? உலகில் இனியுத்தம் ஏற்படக்கூடாது என்று உலக அரசியல் வாதிகள் கெல்லாக் உடன்படிக்கையைச் செய்தார்கள். அதன்கதி என்னயது? ஆகவே இப்படியான ஸ்தாபனங்கள்மீது நம்பிக்கை வைத்திருப்பது வீண்."

## இஸ்லாமியரானர்

தெகிவளையைச் சேர்ந்த ஹாசிம் என்னும் இஸ்லாமியருடைய மகளைக் கடத்திச்சென்றர் என்று என். சபாநாயகம்என்பவர் கொழும்பு தெற்கு நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார். விசாரணையின்போது எதிரி தான் குற்றவாளிதான் என்பதை ஒத்துக்கொண்டார். எதிரி இஸ்லாமிய மதத்திற் சேர்ந்து, தன் மகளை மணக்கச் சம்மதித்துவிட்டபடியால், இந்தவழக்கைத் தொடர்ந்து நடத்த விருப்பமில்லை என்று ஹாஸிம் தெரிவித்தார். நீதிபதி 2வருஷத்துக்கு 200 ரூபா நன்னடத்தைப் பிணையில் எதிரியைவிடுத்து, அரசினர் செலவாக 25 ரூபா இறுக்கவேண்டும் எனவும் தீர்மானித்தார்.

# பட்டங்கள் இல்லை!

## இந்தியாவில் இனி வழங்கப்படா

எங்கள் இலங்கையிலே புதுவருடக் கொண்டாட்டம், மன்னர்பிரான் பிறந்த தினம் என்னும் இவற்றின்போது பட்டங்கள் வழங்கப்படுதல் வழக்கம், இப்பட்டங்களை விரும்பி முயற்சி செய்வோர் பலர். அவற்றைப்பெற அரும்பாடுபடுவோர் பலர். இலங்கையின் நிலைமை இப்படியிருக்க, எங்கள் அயல்நாடாகிய இந்தியாவிலேயுள்ள தேசபக்தர்கள் இப்படியான பட்டங்களை எல்லாம் உதறித்தள்ளிவிட்டிருக்கிறர்கள். கேவலம் ஓர் அந்நிய அரசாங்கத்தாரால் அளிக்கப்படும் சேர்ப்பட்டங்களும், திவான்பகதூர், கான்பகதூர்ப் பட்டங்களும் எதற்கும் உதவாவென்று கொண்டுள்ள அவர்கள் தேசசேவையே பெரிதெனக் கருதி நிற்க, அச்சேவையின் பயனக, பொது ஜனங்கள் 'தேசபந்து" "தினபந்து" "லோகமான்ய" என்ற மகத்தான பட்டங்களைச் சூட்டி வருகிறர்கள்,

காங்கிரஸ் இடைக்கால அரசாங்கத்தில் பங்குபற்றியதும், அந்நிய பட்டங்களை இந்தியாவில் வழங்கப்படுவதை ஒழிக்க வேண்டும் என நிச்சயித்தது. இவ்விஷயத்தில் முஸ்லிம்லீக்கும் ஒத்துப்போனது. பிரிட்டிஷ் அரசாங்கம் இடைக்கால அரசாங்கத்தின் கேள்விக்கிணங்கப் பட்டங்கள் வழங்குவதை இப்போது ஒழித்துவிட்டது. அதன் பயனக இந்தப் புதுவருடத்தில் வழக்கமான பட்டங்கள் வழங்கப்படவில்லை.

# கைவிலங்கு இட்டனர்!

# புடவை நிலைமை

## அரசாங்கத்தின் பராமுகம்

இந்த 1947-ம் ஆண்டுடனவது இலங்கையிலே துணிப்பஞ்சம் நீங்குமா? இங்கிலாந்து, அமெரிக்கா, இற்றலி, ஹாலாந்து, ஸ்பெயின், மெக்ஸிக்கோ, பெல்ஜியம் முதலிய நாடுகளில் உள்ள துணிஉற்பத்தியாளர், இங்குள்ள இறக்குமதி வர்த்தகர்க்கு, இந்த ஆண்டில் அதிக துணிகள் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறர்கள். கொழும்பில் உள்ள பல இறக்குமதியாளர்க்கு ஓர் பெருந்தொகைத்துணி இன்னும் சிலநாட்களில் மேலே குறிப்பிட்ட நாடுகளிலிருந்து கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனல் இத்துணிகளிற் பெரும்பாகம் விலை உயர்ந்ததாக இருக்கும்.

ஜப்பானிலிருந்து துணிகள் கிடைக்கலாம் என்று ஓர் நம்பிக்கை இருந்து வந்தது. ஆனல், இலங்கை யதிகாரிகளின் பராமுகத்தால், அந்தத் துணி இங்கே வராது என்று இப்போது திடமாகத் தெரிகிறது. 150.000 000 யார் துணிகள் இப்போது ஜப்பானிலிருந்து தென்கிழக்கு ஆசியாவில் பர்மா, ஹாங்கொங், மலேயா, இந்தோசீனம் முதலாம் நாடுகளுக்கு அனுப்பப்படவிருக்கிறது. இப்பெருந்தொகைத் துணிகளில் ஓர் சிறுபாகத்தையேனும் இங்கே தருவிக்க அதற்கான முயற்சிகளை இலங்கை அரசாங்கம் செய்யவில்லை.

நிலைமை இப்படியிருந்த போதிலும் தாம் விரும்பிய வேற்றுநாடுகளிலிருந்து துணிகள் இறக்குமதி செய்தற்கு வர்த்தகர்க்கு அரசாங்கம் அநுமதி அளிக்குமேயானல் வேண்டிய துணிகளை நிச்சயமாகப் பெறமுடியும் என்று பல இறக்குமதியாளர் கருதுகிறர்கள்.

1947 ம் ஆண்டில், இந்தியாவில் இருந்து துணி இறக்குமதியாவது இன்னும் குறையும் என்று வர்த்தகர் அபிப்பிராயப்படுகிறர்கள்.

## பொலிசார்மீது கண்டனம்

சென்ற செப்டெம்பர் மாதம் 27ம் திகதி மானிப்பாய்ப்பகுதியைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் பி. அமிர்தலிங்கம், ரீ. நடராசா என்பவர்களுக்குக் கைவிலங்கிட்டுப் ஆனைக்கோட்டைப்பொலிசார் ஓர் குற்றச்சாட்டினிமித்தம் அழைத்துச்சென்றதைக்கண்டிப்பதற்காகமானிப்பாய்ப்பழையமெமோரியல் வித்தியாலயமண்டபத்தில் ஓர் பகிரங்கக் கூட்டம்நிகழ்ந்தது.மானிப்பாய்க் கிராமச்சங்கத் தலைவர் ஸ்ரீ வி.தியாகராஜாகூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஆனைக்கோட்டைப் பொலிசார் இவ்விதமாகக் குறித்த இருவர் விஷயத்திலும் நடந்துகொண்டது பிழை; இவ்விஷயத்தை உள்நாட்டு மந்திரியவர்கள் விசாரணைபுரிந்து ஏற்றன செய்யவேண்டும் என்று ஓர் தீர்மானத்தை மெமோரியல் கலாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ எஸ். வி. அழகரத்தினம் பிரேரித்தார். ஸ்ரீ R. ஞானசம்பந்தன் அதனை அநுவதித்தார்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரிப் பிரதமாசிரியர் ஸ்ரீ வி. சுப்பிரமணியம் B. A. இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்,

இவ்விஷயத்தில் ஏற்ற கருமங்களைச் செய்வதற்கு ஸ்ரீமான்கள் V. வீரசிங்கம், கே. சொர்ணலிங்கம், S. H. பேரின்பநாயகம் என்பவர்களைக் கொண்ட ஓர் உப நிருவாகசபை தெரிந்தெடுக்கப்பட்டது.

## சீமெந்துத் தொழில்

### சமுதாயத்திடம் கொடுக்க அரசினர் மறுப்பு

காங்கேசன்துறையில் அமைக்கப்படவிருக்கும் சீமெந்துத் தொழிற்சாலையை, இதற்கென அமைக்கப்படும் ஓர் கம்பனியார் நடத்துதல் சாலச் சிறந்தது என, இவ்விஷயத்தில் ஆலோசனை கூறிய என்ஜினியர்கள் தெரிவித்தனர். சிலர் சமுதாயமாகச் சேர்ந்து, இத்தொழிற்சாலையை நடத்தினல், குறைந்த செலவில் சீமெந்து உற்பத்தியாகும் என்பதே அவர்களின் அபிப்பிராயம். ஆனல், இந்த அபிப்பிராயத்தைத் தொழில் நிருவாகசபை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. அப்படி ஓர் கம்பனியிடமே இவ்விஷயத்தை விட்டால், அரசாங்கத்தின் கைத்தொழில் விருத்தி சம்பந்தமான மூலாதாரக் கொள்கைக்கே ஆபத்து நேரும் எனக் கைத்தொழில்நிருவாகசபை கருதுகிறது.

இன்னும் இவ்விஷயத்தில், ஓர்சமுதாயத்துக்கு அதிகாரம் கொடுத்தால் அந்நியர் தாமும் இங்கே புகுந்து, தம் முதலைச் சமுதாயத்தில் விடுத்து இலாபம் பெறுவர் என்றும், இப்படியாக நிகழ்தற்கு இலங்கை அரசாங்கம் அநுமதிக்கக்கூடாது என்றும் குறித்த நிருவாகசபை கருதுகிறது.

## ஓர் பெரிய புரட்டு

பர்மியத் தலைவர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனுக்குக் கூப்பிட்டிருப்பது ஓர் பெரிய புரட்டு. அரசியல் விஷயமான முன்னேற்றத் திருத்தங்கள் அமைப்பதற்காகப் பர்மியத்தலைவர்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அழைக்கவில்லை, உலக மக்களையும் பர்மிய மக்களையும் ஏமாற்றவே கூப்பிட்டிருக்கிறது. என்று பர்மியச் சமதர்மிகள் தலைவரான தாக்கின்தான் தன் என்பவர் சென்றவாரம் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறர்.

# ஸ்ரீரமண இன்னருள் தெய்வமாலை

இந்த இன்னருள் தெய்வமாலை விய ஆண்டு மார்கழித் திங்கள் 23-ம் நாள் (7—1—47) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஸ்ரீரமண ஜயந்தியை முன்னிட்டு, திருவருணை ரமணபக்தை உமாவால் பாடப் பெற்றது.

1 அருணைரம ணேசனெங்கள் ஆனந்தத் தெய்வம்
அருள்வழங்கி ஆதரிக்க அவதரித்த தெய்வம்.
2 தவமிகுந்தோர் தவமயமாய்த் தனித்தொளிரும் தெய்வம்
பவமொழித்தே பதமருளும் பரம்பொருளாம் தெய்வம்.
3 மோனவெளி தண்ணிலொளிர் முழுமுதலாந் தெய்வம்
தானெனவே யுளந்தழைக்கும் தன்மயமாம் தெய்வம்
4 சுகமளித்தாங் கிருந்தொளிரும் சுகமயமாம் தெய்வம்
இகபரங்க ளற்றொளிர்பே ரின்புருவாம் தெய்வம்.
5 சரணமுற்ற ரனுபவிக்கும் சற்குருவாம் தெய்வம்
மரணபய மொழித்தாங்கே மன்னிவளர் தெய்வம்.
6 உள்ளொளிர்வ துணரார்க்காய் உருக்கொண்ட தெய்வம்
உள்ளபடி உள்ளொளிரும் உள்ளறிவாம் தெய்வம்.
7 காரணங்கள் காரியங்கள் கடந்தொளிருந் தெய்வம்
ஆரணங்கள் ஆகமங்கள் அழைத்திடுமெந் தெய்வம்,
8 தானியல்பாய்த் தனித்தொளிரும் தற்பரமாந் தெய்வம்
சூனியமுங் கடந்தொளிரும் ஜோதியொளித் தெய்வம்,
9 தோற்றுபொரு ளற்றொளிரும் சுத்தபர தெய்வம்
தேற்றுபொருள் யாவினுளும் சேர்ந்தொளிருந் தெய்வம்.
10 சும்மாவே இருத்தியெனச் சுகமளிக்கும் தெய்வம்
சும்மாவே இருந்தொளிரும் சுகமயமாந் தெய்வம்.
11 துரியமுந்தான் கடந்துநிற்கும் தூவெளியாம் தெய்வம்
பரிந்துசிவ போகமருள் பரம்பொருளாம் தெய்வம்,
12 அருணைதனில் வீற்றிருந்தே ஆட்சிசெய்யும் தெய்வம்
அருளுருவாய் அன்பர்களை ஆண்டுகொள்ளும் தெய்வம்.

### வாழ்த்து

1 வாழ்க வாழ்க ஆனந்த மவுனகுரு வாழ்க
வாழ்க வாழ்க அன்புருவாய் மன்னுசிவன் வாழ்க.
2 வாழ்க வாழ்க அருளுருவாம் மாதவன்றன் வாழ்க
வாழ்க வாழ்க அருளணைப்பில் மாணடியார் வாழ்க,
3 வாழ்க வாழ்க ஜயந்திவிழா மகிழ்சிறக்க வாழ்க
வாழ்க வாழ்க ஜயஜயவென் றருள்ரமணன் வாழ்க.

சுபம்! சுபம்!! சுபம்!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# - வெருட்ட வேண்டாம் -

## என்கிறது பிரிட்டிஷ் பத்திரிகை

எங்கே பார்த்தாலும் இங்கிலாந்தை வெருட்டிக் கருமம்பெற அரசியல் வாதிகள் முனைந்து நிற்கிறார்கள். இந்தியா, பர்மாவில் உள்ள தேசியவாதிகளும்: யூதர்களும் அராபியரும் இங்கிலாந்துக்குத் துப்பாக்கி முனையைக் காட்டிப் பயமுறுத்தித் தம் கருமங்களைச் சாதிக்க முயல்வதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது என்று பிரிட்டிஷ்கன்ஸர்வேற்றிவ் பத்திரிகையான 'டெயிலி டெலிகிறாப்'' எழுதுகிறது. இன்னும் அப்பத்திகை கூறுவதாவது:

''இந்தியாவிலே, நேரு இதோ புரட்சி செய்கிறேன் என்று பூச்சாண்டி காட்டுகிறார். பர்மாவில் ஆங்ஸேன் யுத்தத்திற்கு ஆயத்தம் என்று உம்மாண்டி காட்டுகிறார். பலஸ்தீனத்திலே ஜமால்ஹுஸேஸப்னி என்னும் அராபிடர் தலைவர் எங்கள் தலைகளை வாங்குவதாகக் கொக்கரிக்கிறார். இவர்கள் எல்லாருடைய எண்ணமும் என்ன? வெருட்டினால் பிரிட்டிஷ் அரசாங்கம் பணிந்துவிடும் என எண்ணுகிறார்களா?

''இப்போது இங்கிலாந்திலே ஓர் தொழிற்கட்சி அரசாங்கம் இருக்கிறது, ஆகவே தங்கள் ஜம்பங்கள் வாய்க்கும் என இவர்கள் மனப்பூர்வமாக நினைக்கிறார்கள் போலும், பிரிட்டிஷார் அவ்வளவு முதுகெலும்பில்லாதவர்கள் அல்ல என்பதை இவர்களுக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிவிக்க வேண்டும். இப்படியான வெருட்டுக்களுக்கு இங்கிலாந்து அஞ்சாது என்பதை இந்தத் தொழிற்கட்சி அரசாங்கம் இதிற் சம்பந்தப்பட்டவர்களுக்கு உடன் தெரிவித்து விடுதல் வேண்டும்.''

## பரமபுருஷன் ஸ்ரீ ரமணமூர்த்தி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேறெங்கேபோகவேண்டும்? இங்கே இப்பொதே நீ இருக்கிறாய். இப்போதே உன்னை அறியத்தடையாது? எல்லாவற்றையும் அறிவோனான உன்னை முதலில் அறியாமல் மற்றவற்றை அறிவதாற் பயனென்ன? என்றாற் போன்ற கருத்துக்களமையக் கூறுகின்ற புத்திமதிகளும் கேட்பவர் மனதில் ஊடுருவிப் பாய்ந்து ஆன்மசக்தியைத் தட்டி எழுப்புவன. கேட்பவன் சிரத்தையற்றவனானாலும், பகவானது ஆன்மரசம் நிறைந்த அமுதமொழிகள், சிரத்தையுள்ளவனாக அவனைச் செய்துவிடுகின்றன.

ஒருமுறை பகவானது மங்களத் திருமேனியில் ஈடுபட்ட கண்கள் வேறொருநோக்கில் ஈடுபடா. அவர் அமுத மொழிகளைப் பருகிய செவிகள் மற்ற எம்மொழிகளையும் கேட்க விரும்பா; அன்பின் சாரமும், வலிமையில் எளிமையும் அறிந்த மனம் அதையே எண்ணியெண்ணி முடிவில் எண்ணவும் சக்தியற்று மாளும், வாழ்க்கையே அன்பும் எளிமையும் நிறைந்த வாழ்க்கையாக மாறிவிடுகிறது. துன்பமும் ஆடம்பரமும் நிறைந்த முன்னை வாழ்க்கை சாரமற்றதாகிவிடுகிறது. இவ்வித வாழ்க்கையின் மாறுதல் சாமானியமாகச் சம்பவிக்கக்கூடியதன்று, பகவானது அருள்நோக்கினாலே மட்டும் கிட்டுவதான இப்புனித சாந்த வாழ்வு யாவரையும் ஆச்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் மூழ்கித் திளைக்கவைத்து விடுகிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரது பிற்கால பக்தர் ஒருவர் 'அந்நாளில் இருந்திலேனே' என்ற தலைப்புடன் ஏதோ எழுதியிருந்தார். விஷயம் மறந்துவிட்டது. என்றாலும் அத்தலைப்புமட்டும் மனத்தை விட்டு அகலவில்லை. பகவானைப் பார்க்கும்போதெல்லாம் பகவானைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் இந்நாளில் இருக்கும் பெறற்கரும் பேறான இப்பெரும் பாக்கியத்தைப் பெற்றோமே என்று எண்ணி எண்ணி ஆனந்திக்கும் ஆனந்தத்திற்கு ஓரெல்லையில்லை.

நொடியில் மறையும் போகமும் பொருளும் பேரும் பெருமையும் அந்தஸ்தும் நம்மைப் பாக்கியசாலிகளாக்குவதில்லை, அதற்குநேர்மாறாக அவையெல்லாம் அபாக்கியத்திற்கேநம்மை இழுத்துச்செல்வன. தான் ஜீவமார்க்கத்திற் சென்றுகொண்டிருப்பதாக நினைக்குமொருவன் உண்மையில் மரணமார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கிறான், பகவானருளால் ஒரு விழிப்பு ஏற்படுகிறது, உடனே தன் தவறுதலை யுணர்ந்து ரமண மார்க்கத்திற் சென்று அமிருத்துவமான நித்திய ஜீவத்துவத்தையடைகிறான்.

சம்சாரச் சுழலில் அகப்பட்டு வருந்துவோர்க்குப் பகவானது அருட்கழல்கள் புணையாகத் துணைநின்றுதவுகின்றன. இவ்வவதார மஹாபுருஷர், மகா சற்குரு, பகவான் மஹர்ஷிகள் நீடூழி காலம் வாழ்ந்து தீனர்களுக்கோரடைக்கலம் புகுமாறாக விளங்குவார்களாக.

# மதில் மேற் பூனை

இப்போது இலங்கையிலே சமதர்மக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இரு கட்சிகள் உள. ஒன்று இலங்கைச் சமதர்மக் கட்சி, இதன் தலைவர்கள் டக்ரர் எஸ். ஏ. விக்கிரமசிங்ஹ, ஸ்ரீ ஏ. வைத்தியலிங்கம், மிஸ்ரர் பீற்றர் கெனமன் என்பவர்களாவர். அடுத்தது இலங்கைச் சமசமாஜக் கட்சி: அதன் தலைவர்கள் மிஸ்ரர் பிலிப் குணவர்த்தன, டக்ரர் என். எம். பெரீரா, டக்ரர் கொல்வின் ஆர். டீ. சில்வா முதலியோராவர்;

இவ்விரு கட்சிகளும் ஒருங்கு சேரும், அப்படியானால் இப்போது ஏற்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சீக்கிரத்தில் தோல்வி ஏற்படும் எனப் பலர் எதிர்பார்த்தனர். ஆனால் இந்த இரண்டு கட்சிகளுக்குமிடையே ஒற்றுமை ஏற்படுவது குதிரைக் கொம்பாகவிருக்கிறது. அவை இரண்டும் பரஸ்பரம் குற்றம் சாட்டிக்கொண்டு வருகின்றன.

சென்றவாரம் நீர்கொழும்பில் நிகழ்ந்த ஓர் சமசமாஜிகள் கூட்டத்தில் டக்ரர் என். எம். பெரீரா சமதர்மிகளைக் குற்றஞ்சாட்டிப் பேசினார். இச்சமதர்மிகள் சமய சந்தர்ப்ப வாதிகளல்லாது திடமான அரசியல்வாதிகளல்லர். அவர்கள் இப்போது மதில் மேற் பூனைபோல நிற்கிறார்கள். எந்தப் பக்கத்துக்குப் பாயலாம் என்பதில் அவர்கள் கண்ணோட்டம் செல்கிறது. ஆனால் அவர்கள் அநேகமாக மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே சேருவர் என்பதற்கான உற்பாதங்கள் தோன்றுகின்றன. தொழிலாளிகளுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்ளும் இச்சமதர்மிகள் தடித்த முதலாளிவர்க்கத்தினராய சேனநாயக்காக் குழுவினருடன் சேருவாரானால், அவர்கள் இதுகாறும் ஏழைத் தொழிலாளரை ஏமாற்றிவந்த சாயம் வெளுத்துவிடும்.'' என்று டக்ரர் பெரீரா கூறினார்.

# உருத்திர கணிகையர்

[சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்]

(முற்றொடர்)

### தேவதாசிகள் இலக்கணம்

உலகத்திலே சிவத்தொழிலிற் பற்றுடையவர்களாகிய தாசிகள் புண்ணியத்தின் மிகுந்தவர்கள், எவர்கள் பரம்பரையினாற் றாசிகளோ அவர்களது புண்ணியத்தினெல்லை அளவிறந்ததாம், அவர்கள் சுத்தர்களாம், அவர்களுக்குக் கருமத்துக் கியைந்தபடி ஒழுக்கத்தின் பேதமுளதாம்.

தேவதாசிகளுடைய தொழில்கள் அலகிடல், தெளித்தல், மெழுகல், மாத்தொழில் என்பவைகளும் அரிசி கொண்டுவருதலும் பாத்திரஞ் சுத்தி செய்தலும், பாடலாடல்களைச் சேவித்தலும், துளை வாத்தியம், நரம்பு வாத்தியம் வாசித்தலும் இன்னபிறவுமாம். தேவதாசியென்று என்று எவள் புகழ் பெற்றாளோ அவளுடைய புத்திரி பௌத்திரி முதலியவர்கட்கும் கிரியை விதிக்கப்பட்டுள்ளது அவர் சிவதீக்ஷை முன்னாகத் திரிபுண்டரந் தரித்தற்குரியர் ஆவர்.

இங்கே உருத்திர கணிகைமாராம் பதியிலார் குலத்தவர்க்குரிய இலக்கணம் தொழில் விருத்தி முதலியவை ஆகமக் கருத்தின்படி காட்டப்பெற்றிருக்கின்றன. மகாலிங்கையர் உரையில் உருத்திர கணிகையரைப்பற்றிக் கூறுமிடத்தில் ''உருத்திர கணிகையர் பரமசிவனுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய ஊழியஞ் செய்துகொண்டு மணமின்றி ஒருவரையே கணவராக உடையவர்கள், இக்காலத்தில் அந்த நடை தவறிற்று எனச் சொல்லப்பட்டுள்ளது. உருத்திர கணிகையர் வேசியர்க்கு வேறாய் மணமின்றி உயர்ந்த சாதிகளில் ஒருவனைக் கணவனாகக் கொண்டு பூசாகாலத்தில் சுத்த நிருத்தஞ் செய்யும் மகளிர்கள் என்பது ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையிற் கண்டது,

பதியிலார்குலம் என்பதற்கு ''தங்கட்கு ஒரு நாயகனையும் எய்தாதவர்களாகிய உருத்திரகணிகையர் குலம்'' எனப் பொருள்கூறி, 'அதனாற் பல புருடரைச் சேர்ந்து விபசரிக்கும் வேசியரையே உருத்திர கணிகையராக மயங்கியது அஸங்கதமாயிற்று விபசாரஞ் செய்வோர் வேசியரேயன்றித் தாசியரன்று. அவ்வேசியரைத் தாசியராகக் கோடல் தவறு. காலகதியிற் பிரகிருதத்தில்வேசியரே தாசியராக நியமிக்கப்படுகின்றனர் தாசியரும் வேசித்தொழில் புரிகின்றனர். இவ்வசிஷ்டாசாரம் பிரமாணமாகாது என்று மேற்கோளுங் காட்டினர் திரு, கு. சுப்பராயநாயகர் அவர்கள் உருத்திரகணிகையர்என்ற பதியிலாதார் மரபு, இவர்கள் மரபு வேறு. சேரிப் பாத்தையர் மரபு வேறு. இவர்கள்செய்துவந்த கோயிற் பணிகளிற் சிலவற்றைப் பின்னாளிற் பாத்தையர்கைக்கொண்டனர்என்று சொல்ல இடமுண்டு என்பது சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் உரையிற் கண்டது. இவ்வாற்றால் தேவதாசிகள் வேறு; பொது மகளிர் வேறு என்பது பெறப்படுகின்றது.

அநேக ஆலயங்களிலே [illegible] காலங்களில் பொது மகளிர்களை ஆடவும் பாடவும் பெரும் பொருள கொடுத்து நியமித்து வருகிறார்கள். உருத்திர கணிகையர் பரத சாஸ்திர விதிப்படி சிவப் பிரீதியாக நடிக்கவும் அருட்பாக்களை அன்புபெருகப் பாடவும் நூல்கள் விதிக்கின்றன. அதுவன்றிப் பரத சாஸ்திரத்துக்கியையாத வீண் ஆட்டங்களைக் காட்டி அறியாதாரை மயக்கவும், பொய்ம்மையாளரைப் பாடிய பாட்டுக்களையும் விபரீதக் கருத்துமலிந்த போலிப் பாட்டுக்களையும் பொதுமகளிர் சிவசந்நிதானத்திற் பாடவும் நூல்கள் விதிக்கின்றில. சமய அறிவு சிறிதுமில்லாத உபயக்காரும் அவை கடவுளுக்குப் பிரீதியாகுமென்று நினைத்துப்போலும் தாம் அரிதிற்றேடிய பொருளை வீணே கொடுத்து நிரயத்துன்பத்துக்கு ஆளாகின்றனர். தாசியர் நடனத்தை விரும்பிப் பார்க்க வரும் அறிவிலிகளும் எச்சிலுமிழ்தல் சலமோசனஞ் செய்தல் முதலியவற்றால் ஆலயங்களை அநாசாரப்படுத்துகின்றனர்; அப் பொதுமகளுர்களும் மயிர்கோதி முடித்தல் முதலிய தமது கிரியைகளினால் ஆலயங்களை அசுசிப் படுத்துகின்றனர்.

முற்காலத்திலிருந்த பெரியோர்கள் உற்சவாதிகளைத் திருக்கோயில்களிலே உரிய முறைப்படி செய்து வேண்டிய பேற்றை அடைந்ததாகப் புராணாதி நூல்கள் புகலுகின்றன. இக்காலத்தவர் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார்போன்று தாம் அரிதிற்றேடிய பொருளைத் துர்மார்க்கத்திற் செலவுசெய்து, அகாலத்திலே திருவிழாக்களைச் செய்துவிடுகின்றார்கள், அப்படித் திருவிழாச் செய்தலால் தேவப் பிரீதியாகாது அசுரப் பிரீதியாகுமென்று சிவாகமங்கள் வற்புறுத்திச் செப்புகின்றன. இது தனி விஷயமாகப் பின்னர் வெளிவரும்.

சைவாகமப் பரவையில் மூழ்கிச் சிவானுபூதி பெற்ற ஆறுமுகநாவலப் பெருந்தகையார் பொது மடந்தையர் கோயில்களில் நடிப்பது பாதகச் செயலாமென்று கூறுகிறார்கள், அவர் [illegible] ''உருத்திர கணிகையர் விபசாரம் மதுமாமிச பக்ஷணம் முதலிய பாதகங்களின்றி, சிவவேடம் பூண்டு சிவபத்தியிற் சிறந்தவர்களென்று சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாக இக்காலத்தார் கோயில்களெங்கும் மதுமாமிச பக்ஷணமுடையவர்களாய் வரைவின்றி யாவரையும் புணரும் ஸ்திரிகளை உருத்திர கணிகையரென்று நியோகிக்கிறார்கள்,

தேவாலயங்களில் கணிகையர்களைத் தீண்டலும், இச்சித்துப் பார்த்தலும், அவர்களோடு பேசலும், சிற்றின்பப் பாடல்களைப் படித்தலும் கேட்டலும் கலகஞ் செய்தலும், பாவிகளை நன்கு மதித்தலும், புண்ணியவான்களை அவமதித்தலும் பிறவும் பிராயச்சித்தங்களாற் றீராத பெரும் பாதகங்களென்று சைவாகமங்கள் சொல்கின்றன. இதற்கு மாறாகக் கோயில்களில் பெரும்பான்மையும் இப்பாதகங்களெல்லாம் நடக்கின்றன. நமது சைவசமயிகள் அநேகர் சைவாகம உணர்ச்சி சிறிதுமின்மையானும், பாவத்துக் கஞ்சாமையானும தாம்தாம் வேண்டியவாறே பாவங்களைச் செய்து, இம்மையிற் பரசமயிகளா லிகழப்பட்டு மறுமையில் எரிவாய் நகரத்துக்கு ஆளாகின்றார்கள்'' என்பதாம்.

ஆதலினாலே சைவசமயிகள் தம் பொருளை வீண் ஆடம்பரங்களிற் செலவழித்தலை விடுத்துப் பூசாகாலங்களிலும் உத்ஸவ காலங்களிலும ஓதுவார்களை நியமித்துத் தமிழ்வேதத்தை ஓதவும் சைவப்பிரசாரகர்களை நியோகித்து உரிய காலங்களில் சத்பிரசங்கஞ் செய்யவும் ஒழுங்குசெய்வார்களாயின் அறியாமை நீங்கிச் சைவ உலகம் உய்திபெறும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத பாசம்

## "விநோதன்"

### அதிகப்படுவது அடிமைத்தனமா? சுதந்திரமா?

குமரேசருக்கு வயது அறுபத்தைந்திற்கும் எழுபதிற்கு மிடையில் மதிக்கலாம். அவர் வேளாளர் குடியிற் பிறந்தவர்; தமிழும், ஒரு அளவிற்கு ஆங்கிலமும படித்தவர்; தெய்வபத்தி சைவஒழுக்கம் தொன்மை மறவாமை ஈகை இன்சொல் ஏழைகளில் இரக்கம் முதலிய சுகுணங்களும் சற்கருமங்களும் பூண்டவர்; வறுமையிற் செம்மையாக வாழப் பயின்றுள்ளவர்; அவருக்கு மக்களும் பேரப்பிள்ளைகளும் உளர்; பேரப்பிள்ளைகளுள் ஆண்களாயுள்ள சிலர் அரசாங்க உத்தியோகம் வகித்திருப்ப, பெண்களாயுள்ள சிலர் இல்வாழ்க்கையிற் புகுந்து இனிது வாழ்ந்து வருவோ ராயினர்,

* *

குமரேசருடைய பேர்த்தி யொருத்தி விவாகஞ் செய்தவள், பெயர் நவீனமணி, அவளுடைய கணவன் பெரிய பட்டினத்தில் அரசாங்க உத்தியோகத்தி லிருந்தமையினால், அந்தப் பட்டினத்தில் "வாடைகை"க்கு ஒரு வீடு ஒழுங்கு செய்து யவ்வனமுடைய தன் மனைவியாகிய நவீனமணியையும் அந்தப் பெரிய பட்டினத்திற்குக் கூட்டிக்கொண்டு போய் அவளுடன் அந்த வீட்டிலிருந்து தன் உத்தியோகக் கடமையையும் தவறில்லாமற் பார்த்து வருபவன்; "நத்தார்" விடுமுறை நாட்களில் நவீனமணி தன்சொந்த ஊருக்குப் போகவேண்டு மென விரும்பினாள்; தன்னெக்கத்தை அவள் தன் கணவனுக்கு வெளியிட்டாள்; ஆனால் விடுமுறை நாட்களாக விருந்தாலும் அவன் தன்னுடைய உத்தியோகதானத்திற் பார்க்க வேண்டிய சில கடமைக ளிருந்தமையால், அவன் அந்த விடுதலைக் காலத்தில் ஊருக்கு வந்து மீண்டு உத்தியோக தானத்திற்குப் போதல் முடியாதாயிற்று: அவன் தான் போதல் இயலாதாக, ஊருக்குப் போய்ச் சிலதினம் தங்கி வரவேண்டு மென்று ஆசைப்பட்ட தன் இல்லக் கிழத்தியாகிய நவீனமணியை, தன் சொந்தக்காரராகிய ஒருவர் தம் மனைவிமக்களுடன் பெரிய பட்டினத்திலிருந்து ஊருக்குப் புறப்பட, அவர்கள் துணையில் அனுப்பி வைத்தான். நவீனமணிமகிழ்ச்சியோடு தன் பெற்றூர் வீடுவந்து சேர்ந்தாள்; ஊரிலே தங்கி சிற்சுந் தினத்தில் தன் உற்றூர் உறவினர்தன்னுடன் விடுதிச் சாலையிற் படித்தவர்களாகிய பெண்கள் முதலானவர்களைப் போய்ப் போய்க்கண்டு தொன்மை பாராட்டி வந்தாள்.

* *

அவள் ஒருநாள் தன் பாட்டனுராகிய குமரேசர் வீட்டிற்குப் போய், "அப்பா, எப்படிச் சுகம்" என்று கேட்க, கிழவனார் சுகஞ்சொல்லி, தம் பேர்த்தியின் சுகத்தை விசாரித்தார்; விசாரிக்க, பேர்த்தி விடை சொன்ன பின்னர், அவளைக் குமரேசர் அன்புடன் பார்த்து "மகளே, அந்த ஊரோ உன் சொந்த ஊராகிய இந்தவூரோ உனக்கு அதிக விருப்பம்" என்று கேட்க, நவீனமணி, "பாட்டா, பிறந்த இடத்தை நாடுதே பேதைமட நெஞ்சம்" என்ற விதமாய், நாம் பிறந்தவூரைப் பார்க்க வேண்டு மென்ற ஆசையினால் இங்கே வந்தேனே யொழிய, பாட்டா அந்தப் பட்டினத்திலே போய்ச் சில கால மிருந்தால், பிறகு இங்கே வர மனம் ஒருப்படாது" என்ற தான் போய் வசிக்கும் பட்டினத்தைப் பாராட்டிச் சொன்னாள்.

* *

"ஆ! ஆ! அப்படியா செய்தி, அதை நான் முன் எவருஞ் சொல்லக் கேட்டதில்லை; சரி மகளே. அந்தப் பெரிய பட்டினத்திலே என்ன விசேஷங்களுண்டு?" என்று கேட்டார் பேரனார்.

நவீனமணி: பாட்டா, எங்கள் இந்த ஊரோடு ஒத்துப் பார்க்கும்போது அங்கே எல்லாம் விசேஷமென்றுதான் சொல்ல வாயெழும், ஆனால், நான் அங்கே போனபிறகு அவதானித்த பெரிய விசேஷம், அந்தப் பட்டினத்திலே வசிக்கும் ஆண்கள் பெண்கள் எச்சாதியாராக, எச்சமயத்தவராக, எப்பாஷையினராக எல்லாரும் இங்குள்ளவர்களைப்போலப் பிற்போக்கில்லாமல், முற்போக்கோடும், முழுச் சுவதந்திரத்தோடும் காணப்படுகிறார்கள். அவர்களுள்ளும் என்னைப்போன்ற பெண்பாலார் சுவதந்திரமடைதற்காகிய பல முயற்சிகளைச் செய்கிறார்கள். பல சங்கங்கள் சபைகளைக் காலந்தோறும் கூட்டிப் பெண்களின் கல்வி,இசை,சுவாதீனம் என்னுமிப்படியான விஷயங்களையிட்டுப் பெண்களே உழைத்துவருகிறார்கள்; இந்தவூரிலே பெண்ணாய்ப் பிறந்தவள் அடுத்தவீட்டு அக்காளை ஒருமுறைபோய்க் கண்டுகொண்டு ஐந்து நிமிஷத்தில் வீட்டுக்கு மீண்டு வரவேண்டுமென்றாலும், புருஷனைகேட்டு அவருடைய அநுமதியோடுதான் போகவேண்டும். இந்தவூரிலே எத்தனையோ பழைய கட்டுப்பாடுகள், எத்தனையோ மூடக் கொள்கைகள், எத்தனையோ குருட்டுப் பத்திகள், இன்னும் எத்தனையெத்தனையோ சங்கடங்கள்: ஆனால் அந்தப் பட்டினத்திலே இப்படியான அநியாயம் ஏதுமில்லை, அப்பா" என்று வெறுப்போடு சொன்னாள்.

* *

"மகளே, முன்னேற்றம் சுதந்திரம் இவைகளெல்லாம் அங்கே உண்டென்று சொல்லுகிறாய்; இங்கே பழைய கட்டுப்பாடுகள் பல உண்டென்கிறாய்: சுதந்திரம், முன்னேற்றமென்னுமிவைகள் இல்லையென்கிறாய் நீ, சுதந்திரமென்பதும், முன்னேற்றமென்பதும், கட்டுப்பாடுகளென்பதும் என்ன பொருள்களைக் குறிக்கின்றனவோ என்பது எனக்கு விளங்கவில்லை; பசி வந்திடப் பத்தும் பறந்திடும் என்றபடி, ஒருவனை, இல்லையேல் ஒரு நாட்டினரைப் பஞ்சம் பிடிக்குமானால், பிடித்துவிட்டு நீங்காமல் பல வருடங்கட்கு நிற்குமானால், அவனுக்கு இல்லையேல் அந்நாட்டினர்க்கு, மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை முதலியவைகளெல்லாம் உடனே இல்லாதொழியும். இவைகளை யிழந்தவர்களுக்குச் சுயமரியாதை யெங்கே? சுதந்திரமெங்கே? சந்தோஷமெங்கே? மனரம்மியமெங்கே? ஏனைய நன்மைகளெங்கே? ஒன்றும் ஒருபோதுங் கைகூடா; மானத்தைக் காத்தற்காகிய துணியை மக்கள் வாங்கி உடுத்துக்கொள்ள வகையறியாது இடர்ப்படும் இக்காலத்திலே சுதந்திரமென்ன? முன்னேற்றமென்ன? பிறப்புரிமையென்ன? இந்தக்காலத்திலே மனுஷனுக்கு இன்றியமையாப் பொருள்பண்டங்களாகிய உணவுப்பொருள் உடைப்பொருள்களுக்கெல்லாம் சட்டுப்பாடு கட்டுப்பாட்டுள் அகப்படாத பொருள்களுக்கெல்லாம் பெரும் "தட்டுப்பாடு." எந்தக் கருமத்திற்கும் இங்குள்ள மக்கள் அதிகாரிகளை எதிர்பாக்க, அதிகாரிகள் அந்நிய நாட்டினரை எதிர்பார்த்து, அந்நிய நாட்டினர் உதவி செய்யாத சமயத்தில் எங்கள் அதிகாரிகளுடன் நாங்களும் இடர்ப்படுகிறோம்; அற்பபொருளைப் பெறவேண்டுமானாலும்பிறரையிரந்து பின்சென்று பற்காட்டி, இச்சகம் பேசி ஒருவாறு பெற்றுக்கொள்ளுகிறோம்: இதுதானா சுதந்திரம்? இதுதானா முன்னேற்றம்? சுதந்திரமென்பதும் இந்தப் பஞ்சகாலத்திற்கும் வெகுதூரமென்றே அறிந்துகொள்; சுதந்திரம் இப்போது அங்குமில்லை; எங்குமில்லை; இந்தப் பூவுலகம் முழுவதுமில்லையென்று சொன்னாலும் தவறாகாது. உண்மையான சுதந்திரம் வேறு; இங்குள்ளவர் பேசும் சுதந்திரம் வேறு: இது போலிச் சுதந்திரம்; இந்தச் சுதந்திர விடாயும், இதனையிட்ட பேச்சும், இதனைப் பெறுதற்காகிய முயற்சியும்,சுயநலத்தோடு சம்பந்தப்பட்டவையென்றறிந்துகொள்ள வேண்டும்; இந்த விஷயமாக இன்னமும் சந்தர்ப்பம் வாய்த்தாற் சொல்லுவேன்; இப்பொழுது நீ சுகமேபோய்வா" என்று பாட்டனார் சொல்லக் கேட்டுக்கொண்டு பேர்த்தி அவ்விடம் விட்டகன்றாள்?

* *

### 'எங்கள் தெருவிற் காணலாம்"

உபாத்தியாயர் பூமிசாஸ்திரம் படிப்பிக்கும்போது அந்த வகுப்பிலுள்ள பிள்ளைகளைப் பார்த்து, 'பிள்ளைகளே, ஆறு, ஏரி, கடல், விரிகுடா, ஒடுங்குகுடா. நீரிணை யென்னும் நீர்நிலைகளையும், மலை, பள்ளத்தாக்கு, குடாநாடு, முனை முதலிய நிலத்தின் பாகங்களையும் இந்தப் பூமிசாஸ்திரப்படத்திலே பார்த்து நீங்கள் விளங்கிக்கொள்வதைக் காட்டிலும், இவைகளுள்ள இடங்களிலே போய்ப்போய் நேரிற் பார்த்தால் இவைகளுடைய தன்மை உங்களுக்கு நன்கு புலப்படும்" என்றார். அப்போது அந்தவகுப்பிலிருந்த கந்தையன் என்னும்சிறுவன்எழுந்து "உபாத்தியாரையா! அப்படியெல்லாம் போய் அலையவேண்டியதில்லை; எனக்கு ஒரு உபாயம்புலப்படுகிறது; எங்கள் வீட்டின் முன்னுள்ள குறுக்குத்தெருவில், பெருமழை பெய்த பின் மூன்று நாளைக்கு அவதானித்துப் பார்த்தால், நீங்கள் சொன்ன ஆறு, ஏரி, விரிகுடா, ஒடுங்குகுடா, நீரிணையென்னுமிவைகளையும், குன்று, பள்ளத்தாக்கு, குடாநாடு, முனை முதலியவைகளையும் சிறிய பிரமாணத்திலே காணலாம். என்னோடு நீங்களும் எங்கள் வகுப்புப் பிள்ளைகளும் வந்தால் இப்பொழுதும் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டுவேன்" என்றான்.

உபாத்தியாயர்: ஏன் கந்தையா, உங்கள் வீட்டின் முன்புறத்திலுள்ள தெரு திருத்தப்படாமற் கிடக்கின்றதா?

கந்தை: நான் குழந்தையாயிருந்த காலத்திலே திருத்தப்பட்டதென்று எங்கள் அப்பர் சொன்னதுண்டு" என்றான். கேட்ட பிள்ளைகள் சிரிக்க, உபாத்தியாயர் புன்னகை செய்தார்.

# எப்படி நம்புவது?

## மிஸ்டர் சேனநாயக்காவின் எதிர்கால வேலை

ஐக்கிய தேசியக் கட்சி தன் தேர்தற் பிரசார வேலையில் மும்முரமாக இன்று ஈடுபட்டிருக்கிறது. அக்கட்சி தனக்கென ஓர் பத்திரிகையையும் வைத்து நடத்துகிறது. அப்பத்திரிகையின் முதல் இதழில், கட்சித் தலைவர் மிஸ்டர் சேனநாயக்காவே ஓர் கட்டுரை வரைந்திருக்கிறார். இந்த இலங்கையை ஓர் உன்நத நாடாக்குவதே தம் ஐக்கிய தேசியக்கட்சியின் லட்சியம் என்று அக்கட்டுரையில் மிஸ்டர் சேனநாயக்கா கூறுகிறார். இந்த நோக்கம் மகோன்நதமானது. இதனை ஆட்சேபிக்க எவராலும் முடியாது.

எங்கள் நாடு உன்நத நாடாவதற்கு வேண்டிய இலக்கணங்கள் யாவை? முதலில் சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம்மிளிரவேண்டும். நாட்டில் லஞ்சம் முதலிய துர்க்குணங்கள் இல்லாதொழிய வேண்டும். நாட்டின் அதிகாரிகள் நேர்மையாகக் கடமையாற்றவேண்டும்; கள்வர் சோரர் பயம் இல்லாதொழியவேண்டும். இப்படிப்பட்ட இலட்சணங்களை ஆக்குதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அல்லது மிஸ்டர் சேனநாயக்காவுக்குத் தகுதியுண்டா? அப்படித் தகுதியும் யோக்கியமும் உடையராயிருந்தால், இந்த 16 ஆண்டு காலமும் மிஸ்டர் சேனநாயக்கா இந்தநாட்டை ஏன் உன்நத நாடாக்கவில்லை? இந்த இலங்கையைச் சென்ற 16 ஆண்டு காலமும் நிர்வாகம் செய்த அவர்கள் தான் இன்று ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெயருடன் புறப்பட்டிருக்கிறார்கள். இதுவரை இந்த நாட்டை உன்நத நிலையில் வைக்க இவர்கள் செய்த முயற்சியை யாரேனும் தடுத்ததுண்டா? எனவே, இதுவரை ஒன்றும் செய்யாதிருந்துவிட்டு, இனி ஏதோ சாதித்துவிடுவோம், வானத்தை வில்லாக வளைப்போம் என்றெல்லாம் ஜம்பம் பேசுகிறார். இவருடைய கூற்றுக்களை எவ்வாறு நம்புவது?

## பெற்ரோல் விலை

இந்தஆண்டு ஆரம்பத்திலிருந்து பெற்ரோல் விலை கலன் ஒன்றுக்கு 50 சதம் அதிகரிக்கப்பட் டிருக்கிறது

## பஸ்தொழிலாளர் வேலை நிறுத்தம்

சாவகச்சேரி, கொடிகாமம், மன்னார், முல்லைத்தீவு முதலாம் பகுதிகளுக்குச் செல்லும் வடபகுதி பஸ்களில் வேலை செய்யும் சாரதிகள் கண்டக்ரர்மார் என்னும் தொழிலாளர் இன்றுகாலை தொடக்கம் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். குறித்த பஸ்களின் சொந்தக்காரக் கம்பனியார், தொழிலாளர்க்குரிய பழைய பாக்கி வேதனத்தை இன்னும் கொடுக்காமலிருப்பதுவே, இவ் வேலை நிறுத்தத்துக்குப் பிரதான காரணமாம்.

## பாஞ்சால லீகர் விலகினர்

பாஞ்சால முஸ்லிம் லீக்கின் பிரபல அங்கத்தவராயிருந்த மகமத் சர்வார் என்பவர் இப்போது அந்த ஸ்தாபனத்திலிருந்துவிலகிமஜ்லிஸ்-அஹ்ரார்என்னும்தேசியமுஸ்லிம்சபையின் அங்கத்தவராகச் சேர்ந்துவிட்டார். இப்போது முஸ்லிம் லீக் என்பது ஜின்னாவின் கைப்பொம்மையாக விருக்கிறது. அதனைத் திருத்தியமைப்பது என்றால் முடியாத காரியம். எனவே அதனை விட்டு விலகுவதன்றி வேறொன்றும் செய்யமுடியாது என்று மிஸ்டர் மகமத் சர்வார் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்,

## பொலிஸ்பகுதி அதிகாரி

இப்போது பொலிஸ்பகுதி அதிகாரியாயுள்ள மிஸ்டர். ஆர். ஆர். எம். பேக்கன் என்பவரையும் இன்னும் இரு உயர்தர அதிகாரிகளையும் நீக்க, உள்நாட்டு மந்திரி நிருவாகசபை தீர்மானித்ததை அங்கீகரித்து, தேசாதிபதி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அந்த அறிக்கையிலே, குறித்த மூன்று உத்தியோகத்தர் மிகவும் திறமையுடனேயே கருமம் ஆற்றி வந்தனரென்றும். ஆனால் உள்நாட்டு நிருவாக சபை இப்படித் தீர்மானித் திருப்பதாகவும்; அந்த உத்தியோகத்தர் தாம் இங்கே வருவதற்கு முந்தி வகித்த உத்தியோகத்துக்கே மீண்டு போகச் சித்தமா யிருக்கிறபடியாலும், தாம், இந்த உத்தியோகத்தரின் சேவையை நிறுத்த நேர்ந்துள்ளதென்றும் குறிப்பிட் டிருக்கிறார்.

## மத்திய மாகாணத் தலைவர்

மத்திய மாகாணத் தலைவராக விருந்த மிஸ்டர். ஆர். அலுவிகாரை பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட் டிருப்பதால், அந்த இடத்துக்கு இப்போது தொழிற் பகுதி அதிகாரியான மிஸ்டர். ஏ. ஈ. கிறிஸ்தோபல்ஸ் நியமிக்கப்பட் டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

பரிசு ரூ. 1000—00

சாதாரண

## அறிவுப்போட்டி நிர் 1

பிரவேசக் கட்டணம்

சதம் 50

முடிவு தேதி 31—1—47

விபரத்திற்கு

சாதாரண அறிவுப்போட்டி

Leon Villa Bolawatta

Dankottuwa

என்னும் விலாசத்திற்கெழுதவும்

Mis 31 7—1—47


## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,

த. சின்னத்துரை,

தாவடி.

●

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநோம் உட்கொண்டதினுல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,

லோறன்ஸ் மிக்கேல்,

கரையூர்.

(Mis 195 22-10 to 21-1-47)


## உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானுல்

## இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்



## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
காலருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நெ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### சனி ஜனவரி 4

காலை: 7-5 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 பி எஸ் ரங்கநாயகி வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி வி ராஜாராம் பாட்டு 8.30 காலை இசைத்தட்டு 9 முடிவு.

1 பி எஸ் ரங்கநாயகி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஆங்கிலப் பேச்சு 2 தமிழில் செய்திகள் 2-05 ஆங்கிலப்பேச்சு 2.15 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 2.45 முடிவு.

மாலை 5 எம் ஆர் குஞ்சம்மாள் பாட்டு 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 டி வி ராஜாராம் பாட்டு 7.15 தோட்டககலை 7.30 தமிழில் செய்திகள் 7.45 மகராசில் உள்ளபடி 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 கே பி வே ராஜு 10 இசைவேளை இசைத்தட்டு 10.30 முடிவு.

### ஞாயிறு ஜனவரி 5

காலை 7-15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஏ விநாயக முதலியார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 கிளாரினெட் இசை இசைத்தட்டு 8-30 கே கோசம்மணி பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12-30 திருந்கியவிதர் 12.40 உழத்த 12-45 சஞ்சிவராத்பா 12.55 புச்சை 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஜெ ஜோஸ் 2 தமிழில் செய்திகள் 2 05 பிணைஜலம் 2.30 நீங்கள் கேட்டவை 3 முடிவு

மாலை: 5 கே கொச்சம்மணி பாட்டு 5.40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஏ விநாயக முதலியார் பாட்டு 7.30 தமிழில் செய்திகள் 7-45 நமது சபாற்பெட்டி 8 டி ஆர் நவநீதம் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-15 மதராசில் உள்ளபடி 10.30 முடிவு,

### திங்கள் ஜனவரி 6

காலை 7.15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எஸ் இராசரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8.30 என் பி ரங்கசாமிப்பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் பி ரங்கசாமிபிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 என் பி ரங்கசாமிபிள்ளை பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 ரத்னம்பிள்ளை நாகஸ்வரம் 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆலூர் அமிர்தவல்லி சுந்தரவல்லி பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுப ஆட்சி இந்தியாவில் 8 ஆலூர் அமிர்தவல்லி சுந்தரவல்லி பாட்டு 8-30 இசைக்கதம்பம் 8.55 இடைவேளை இசைத்தட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 த்வாரம் வெங்கடசாமி நாயுடுவின் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 மதராசிலுள்ளபடி 10-30 முடிவு.

### செவ்வாய் ஜனவரி 7

காலை 7-15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மூவலூர் ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசைத்தட்டு 8-30 டி கே பக்கிரிசாமிப்பிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 டி கே பக்கிரிசாமிப்பிள்ளை புல்லாங்குழல் 2.15 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 மூவலூர் எஸ் செல்லப்பா பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலக்கிய ரசிகம் 7-15 வெள்ளைக்காக்கை 7.30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சவூர் லட்சுமி நாராயண பஞ்சவதா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9.45 மதராசில் உள்ளபடி 10.30 முடிவு.


## விளம்பரமின்றேல் பெரும் பணமில்லை



# இந்துசாதனம்

## ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

### பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள் | வெளியூர். | மலாய்நாட்டுக்கு. |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.



## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

## சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய

ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா மூலிய செலவு வேறு.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி

மேடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை.

வல்வை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis. 211 1.11.46—30-4-47 (வெ)



## NEW IRON SAFES FOR SALE

## புதிய இரும்புப் பெட்டிகள்

விற்பனைக்கு வந்துவிட்டன

### யுத்த காலத்திற்குப்பின் இதுவே முதல் இறக்குமதி

வியாபார ஸ்தலங்களுக்கும், வீடுகளுக்கும், அடைவுகடைகளுக்கும் பாவிப்புக்கு ஏற்றஅளவுகளில் குறைந்தவிலையில்திறமான நூதனபூட்டுக்கள்அமைக்கப்பெற்ற இரும்புப்பெட்டிகள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. தங்களுக்குத் தேவையான பெட்டிகளை கீழ்க் காணும் விலாசத்தில் நேரில் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஸ்ரீ பத்மநாத ஸ்ரோர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

Tele {Phone 68
grams SIRIRANGAN

S. S. PONNUDURAI

Siri. Pathmanatha Store

105. K. K. S. ROAD

Grand Bazaar JAFFNA.

Mis 270 13-12-46—12-3-47



## India Super Tyres and Tubes

## இந்தியா சுப்பர் ரையர் & ரியூப்

கார் லொறி சைஸ்கள்

ரையர் கட்டுப்பாடு நவம்பர் மாசம்
21-ந்உ யுடன் முடிவடைந்து விட்டது.

எங்களிடம் சொற்பதொகையே இருப்பதால் தேவையானதற்கு இப்பொழுதே உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்

C. S. Nadarajah Chetty,

41, K. K. S. Road, JAFFNA.

Mis 257 3-12—28-2-47


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.


Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, January, 3, 1947.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org